**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 182/2023**

நாள்: 10.07.2026.

பெயர்: தனலெட்சுமி (வா.சா.1) க/பெ: பழனிசாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

1) எனது தந்தை கந்தசாமியின் வாரிசுகள் யார் யார் என்றால் 1) தனலெட்சுமி எனும் நான், 2) விஜயலெட்சுமி, 3) தெய்வசிகாமணி, 4) கஸ்தூரி, 5) மங்கையர்கரசி ஆகியோர் ஆவோம். எனது தாய் சரோஜா தற்போது உயிருடன் உள்ளார். இவ்வழக்கின் 6ம் வாதி முருகன் யார் என்றால் எனது தாயின் அண்ணன் கலியபெருமாளின் மகன் ஆவார், அந்த முறையில் எனக்கு அவர் மாமன் மகன். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண்.370/2E என்றால் சரிதான். 09.03.1998ல் எனது தந்தை கந்தசாமி சர்வே எண்.370/2Eல் 1ம் பிரதிவாதிக்கு 5 செண்ட் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அவருக்கு கிரையம் கொடுத்த 5 செண்டிற்கு நான்கெல்லையாக ரோட்டிற்கு வடக்கு, என் மீதமுள்ள மனைக்கு கிழக்கு, தெற்கு, நாகரத்தினம் நிலத்திற்கு மேற்கு என்று கண்டு தான் எனது தந்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

2) எனது தந்தை கந்தசாமி எப்போது இறந்தார் என்றால் இன்றிலிருந்து சுமார் 8 வருடங்கள் முன்னர் இறந்தார். எனது தந்தையிடம் கிரையம் பெற்ற 1ம் பிரதிவாதிக்கு தான் அந்த கிரைய சொத்து பாத்தியம் என்றால் சரிதான், அந்த சொத்து கிரையம் பெற்ற பிறகு 1ம் பிரதிவாதி அனுபவத்தில் இருந்து வந்தது என்றால் கிரையம் பெற்ற பிறகு 4 முறை தான் அவர் ஊருக்கே வந்தார், வந்த போது கிரைய சொத்தை பார்த்து செல்வார். தற்போது 1ம் பிரதிவாதி சென்னையில் குடியிருந்து வருகிறார். 1ம் பிரதிவாதி பெற்ற கிரைய சொத்தில் தற்போது மின் கம்பம் உள்ளது என்றால் சரிதான்.

3) நாங்கள் தாக்கல் செய்த வா.சா.ஆ.3 மாதிரி வரைபடத்தில் அந்த மின் கம்பம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 உள்ள விபரங்கள் சரியல்ல என்றாலும், அவை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பத்திர விபரத்தை வைத்து கற்பனையாக வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.3 படி பூஸ்துதியில் அனுபவம் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற

சொத்தை தான் 2ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தைப் பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் தெரியும். எங்கள் குடும்பத்தில் எப்போது நாங்கள் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் எனது தந்தை இறப்பிற்கு பின் பிரித்துக்கொண்டோம், நான் கூறிய பாகப்பிரிவினையின் போது வழக்கு சொத்தை பொறுத்து மட்டும் பாகம் பிரித்துக்கொண்டோமா அல்லது இதர சொத்துக்களையும் பாகம் பிரித்துக்கொண்டோமா என்றால் தந்தை பெயரில் இருந்த அனைத்து சொத்துக்களையும் பிரித்துக்கொண்டோம். நாங்கள் பாகம் பிரித்துக்கொண்டதை ஆவணமாக எழுதி பதிவு செய்துக்கொண்டோமா என்றால் பதிவு செய்துக்கொண்டோம். நாங்கள் பாக பத்திரம் எழுதி பதிவு செய்தது தாவா சொத்தைப் பொறுத்து மட்டும் தான் என்றாலும், அவ்வாறு பதிவு செய்ததற்கு காரணம் 1ம் பிரதிவாதிக்கு எனது தந்தை கிரையம் கொடுத்த சொத்தை அபகரிக்க வேண்டி தான் என்றாலும் சரியல்ல. நாங்கள் எழுதிக்கொண்ட பாகப்பத்திரத்தில் தவறான நான்கெல்லையாக 1ம் பிரதிவாதி சம்மன்ஸ் மேரியை காண்பித்து, 1ம் பிரதிவாதிக்கு எனது தந்தை கிரையம் கொடுத்த சொத்தையும் சேர்த்து தவறாக பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல.

4) நாங்கள் பாகப்பத்திரம் எழுதிக்கொண்ட பிறகு பாக சொத்துக்களை உட்பிரிவு செய்துக்கொண்டோமா என்றால் உட்பிரிவு பற்றி எனக்கு தெரியாது, ஆனால் எங்களுக்கு தனிப்பட்டா பெற்றுக்கொண்டோம். எங்கள் பெயருக்கு வழங்கிய தனிப்பட்டாக்களைப் பொறுத்து 1ம் பிரதிவாதி கொடுத்த மனுவின் பேரில் ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் எங்களை விசாரணை செய்தார் என்றால் சரியல்ல, அழைப்பாணை வந்தது, அதன் பேரில் என்னை விசாரித்ததாக ஞாபகம் இல்லை. 1ம் பிரதிவாதியின் மனுவின் பேரில் எங்களை விசாரித்தார்கள் என்றாலும், விசாரித்ததாக ஞாபகம் இல்லை என்று நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

5) 1ம் பிரதிவாதி கொடுத்த மனுவின் பேரில் தாவா சொத்தை கிராம நிர்வாக அலுவலர், வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் ஆகியோர் பார்வையிட்டு சென்றனர் என்றால் நான் கரடிகுளத்தில் வசித்து வருவதால் அவர்கள் பார்வையிட்டனரா இல்லையா என்பது எனக்கு தெரியாது, அதிகாரிகள் பார்வையிட்டு சென்ற பிறகு 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற அனுபவ சொத்தை ஊர்ஜிதம் செய்து நாங்கள்

ஏற்படுத்திக்கொண்ட பாகப்பத்திரத்தில் தவறு இருந்ததால், அந்த பாகப்பத்திரத்தின் அடிப்படையில் ஏற்பட்ட உட்பிரிவுகளை ரத்து செய்து வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது, எனக்கு மேற்படி உத்தரவு பற்றி தெரிந்திருந்தும், தெரியாது என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6) எனது தந்தை கிரையம் கொடுத்த சொத்தை தான் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றாலும், அந்த சொத்தில் எனக்கோ, எனது குடும்பத்தினருக்கோ எவ்வித பாத்தியமும் இல்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1ன் படி தான் 2ம் பிரதிவாதி தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து ரோட்டிற்கு அருகில் இருப்பதாலும், விலை மதிப்பு அதிகாமாக இருப்பதாலும் அதனை அபகரிக்க வேண்டி இவ்வழக்கை மோசடியாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்து மனைப் பகுதியா, நிலமா என்றால் மனைப் பகுதி தான். 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியமான சொத்தை அபகரிக்க வேண்டி மோசடியாக இவ்வழக்கை நாங்கள் தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு 1, 2 பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/ப.தனலெட்சுமி/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.